**நவம்பர் – 20**

# TNPSC துளிகள்


- கோரமண்டல் இன்டர்நேஷனலின் ஓய்வு பெற்ற தலைவரும் முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவருமான அருணாச்சலம் வெள்ளையன் சென்னையில் காலமானார்.
- இந்தியா 2026 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து அதன் வருடாந்திர LPG இறக்குமதியில் சுமார் 10 சதவீதத்தினை உள்ளடக்கிய 2.2 மில்லியன் டன் LPG வாயுவை இறக்குமதி செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டது.
- எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஆனது, குவாலியரில் உள்ள BSF அகாடமியில் உள்ள ஆளில்லா விமானப் போர்த் திறம் பயிற்சி (SDW) நிறுவனத்தில் துர்கா ஆளில்லா விமானப் பிரிவு எனப்படும் அதன் முதல் அனைத்து மகளிர் ஆளில்லா விமானப் பிரிவைத் தொடங்கியது.
- இந்திய இராணுவத்தின் தெற்குப் படைப் பிரிவு ஆனது (புனேவைத் தலைமையிடமாகக் கொண்டது), திரிசூல் எனப்படும் முப்படைப் பயிற்சியின் ஒரு பகுதியாக, ராஜஸ்தானின் பாலைவனப் பகுதியில் அகண்ட் பிரஹார் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தியது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதியன்று சவுதி அரேபியாவில் உள்ள மதீனா அருகே நடைபெற்ற பேருந்து விபத்தில் 45 உம்ரா இந்திய யாத்ரீகர்கள் உயிரிழந்தனர்.
    - உம்ரா என்பது சவுதி அரேபியாவில், குறிப்பாக புனித நகரங்களான மெக்கா மற்றும் மதீனாவில் நடைபெறும் ஒரு இஸ்லாமிய யாத்திரை ஆகும்.
- 16வது வருடாந்திர அகாடமி ஆளுநர்கள் விருதுகளில் அமெரிக்க நடிகர் டாம் குரூஸுக்கு கௌரவ ஆஸ்கார் விருது வழங்கப்பட்டது.
- சுவீடன் ஆனது தொலைபேசிகள் மற்றும் அட்டைகள் மூலம் நேரடி பணத்திற்கு மாற்றாக டிஜிட்டல் பணம் செலுத்துவதன் மூலம் உலகின் முதல் பணமில்லா நாடாக மாறியுள்ளது.
- ஆங்கில டார்ட்ஸ் விளையாட்டு வீரர் லூக் லிட்லர் அவரது 18வது வயதில் உலகின் முதல் இடத்தினைப் பெற்ற இளம் வீரர் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- டைட்டன்ஸ் ஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் இன்கார்பரேட்டட் (TSI) நிறுவனத்தின் 2025–2029 ஆம் ஆண்டு விண்வெளி வீரர் திட்டத்திற்கான விண்வெளி வகுப்பிற்கான விண்வெளி வீரர் தேர்வாளராக நிடடவோலைச் சேர்ந்த கைவல்யா ரெட்டி குஞ்சலா (17) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
    - முன்னதாக சர்வதேச வான்வழி மற்றும் விண்வெளித் திட்டத்தை நிறைவு செய்து உள்ள கைவல்யா 2 தற்காலிக சிறுகோள்களைக் கண்டுபிடித்தார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## எகிப்தில் தமிழ்-ரோமன் வர்த்தக இணைப்புகள்


- எகிப்தின் செங்கடல் கடற்கரையில் உள்ள ஒரு பழங்காலத் துறைமுக நகரமான பெரெனிகேயில் நடைபெறும் அகழ்வாராய்ச்சியில் தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை (TNSDA) இணைந்துள்ளது.
- தமிழர்களுக்கும் ரோமானியர்களுக்கும் இடையிலான பண்டைய வர்த்தக தொடர்புகளுக்கான ஆதாரங்களை அடையாளம் காண்பதே இதன் நோக்கமாகும்.

- 1995 ஆம் ஆண்டு பெரெனிகேயில் நடைபெற்ற முந்தைய அகழ்வாராய்ச்சிகளில் கொரபுமான் என்ற தமிழ்-பிராமி எழுத்தினைக் கொண்ட ஒரு மட்பாண்ட ஓடு கண்டெடுக்கப் பட்டது.
- குசைர் அல்-காதிம் உள்ளிட்ட பிற செங்கடல் தளங்களில், கானன் மற்றும் கேட்டன் போன்ற நூல்களுடன் தமிழ்-பிராமி பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப் பட்டன.




# தேசியச் செய்திகள்

## வரைவு விதைகள் மசோதா 2025





- விதைகள் சட்டம் (1966) மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை (1983) ஆகியவற்றிற்குப் பதிலாக விதைத் தரம், ஒழுங்குமுறை மற்றும் கண்டறியும்

தன்மைக்கான நவீனக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதை இந்த வரைவு விதை மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சாகுபடி மற்றும் பயன்பாட்டிற்கான மதிப்பு (VCU) சோதனைகளின் அடிப்படையில் விதை வகைகளின் கட்டாயப் பதிவை இந்த மசோதா அறிமுகப்படுத்துகிறது மற்றும் அனைத்து விதைகளுக்கும் QR அடிப்படையிலான டிஜிட்டல் கண்காணிப்பு தேவைப் படுகிறது.
- விவசாயிகள் ஒரு தயாரிப்புப் பெயரின் கீழ் மட்டுமே வேளாண் நிலத்தில் சேமிக்கப்பட்ட விதைகளைச் சேமிக்க, பயன்படுத்த, மீண்டும் விதைக்க, பரிமாற்றம் செய்ய மற்றும் விற்க உரிமையை கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையில் மேலும் அவர்களுக்கு அபராதங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- இந்த மசோதாவானது, விதைத் தரத் தரநிலைகள், சான்றிதழ் நிறுவனங்கள் மற்றும் சோதனை ஆய்வகங்களை வலுப்படுத்துகிறது மற்றும் மாதிரிகள் சேகரித்தல் மற்றும் பறிமுதல் செய்வதற்கான ஆய்வாளர்களுக்கு மிகவும் தெளிவான அதிகாரங்களை வழங்குகிறது.
- பற்றாக்குறை அல்லது இலாபம் ஈட்டும் சூழலின் போது விதை விலை சார்ந்த ஒழுங்கு முறைக்கான விதிகளுடன், தரப்படுத்தப்பட்ட அபராத முறை அறிமுகப்படுத்தப் பட்டு உள்ளது.

## உலகின் ஆழமான கடலடி ஆய்வகம்




- இந்தியப் பெருங்கடலில் 6,000 மீட்டர் ஆழத்தில் மனிதர்கள் வசிக்கும் வகையிலான கடலடி ஆராய்ச்சி ஆய்வகத்தைக் கட்டமைக்கும் திட்டத்தை இந்தியா அறிவித்துள்ளது.
- வாழ்வதற்குத் தேவையான ஆதரவு அமைப்புகள் மற்றும் அழுத்தத்தை எதிர்க்கும் அமைப்புகளைச் சரிபார்க்க 500 மீட்டர் ஆழத்தில் ஒரு சோதனை தொகுதி முதலில் சோதிக்கப் படும்.
- முழு அளவிலான ஆய்வகம் ஆனது, அமெரிக்காவில் உள்ள அக்வாரிஸ் ரீஃப் பேஸ் உட்பட 19 மீட்டர் ஆழத்தில் உள்ள எந்தவொரு ஆராய்ச்சி நிலையத்தையும் விட ஆழமான பகுதியில் செயல்படும்.
- இந்த ஆய்வகம் ஆனது ஆழ்கடல் உயிரியல், புவியியல், உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயர் அழுத்தத்தின் கீழ் மனிதச் செயல்திறன் ஆகியவற்றில் ஆய்வுகளை ஆதரிக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## கார்டெல் டி லாஸ் சோல்ஸ் – தீவிரவாதக் குழு

- அமெரிக்கா கார்டெல் டி லாஸ் சோல்ஸை (கார்டெல் ஆஃப் தி சன்ஸ்) ஒரு தீவிரவாத


அமைப்பாக அறிவித்தது.

- சன்ஸ் கார்டெல் என்பது ஒரு முறைசாரா வெனிசுலா நாட்டின் ஒரு குற்றவியல் அமைப்பாகும்.
- இந்த குழுவானது பெரிய அளவிலான போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- இந்தக் குழுவானது ட்ரென் டி அரகுவா மற்றும் சினலோவா கார்டெல் உள்ளிட்ட பிற தீவிரவாத அமைப்புகளுக்குப் பொருள் ஆதரவை வழங்கியதாக குற்றம் சாட்டப் பட்டு உள்ளது.
- இந்த கார்டெல் என்பது அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகியவற்றிற்கு போதைப் பொருட்களைக் கடத்துகிறது மற்றும் அந்தப் பிராந்தியங்களில் தீவிரவாத நடவடிக்கைகளை ஆதரிக்கிறது.




## பொருளாதாரச் செய்திகள்

### SEBI சீர்மை மறு ஆய்வுக் குழு




- இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) மூத்த அதிகாரிகளுக்கான ஆதாய முரண் மற்றும் வெளிப்படுத்தல் விதிகளை கடுமையாக்குவதற்காக SEBI அமைப்பு பிரத்யுஷ் சின்ஹா குழுவை அமைத்துள்ளது.
- தலைவர், முழுநேர உறுப்பினர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுக்கு கட்டாயச் சொத்து மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல்களை இக்குழு பரிந்துரைத்தது.
- உயர்மட்டத் தலைமையை உள்பேர வர்த்தக விதிகளின் கீழ் "உள்" என்று வகைப் படுத்தவும், தனிப்பட்ட சந்தை முதலீட்டைத் தொகுக்கப்பட்ட தொழில் ரீதியாக நிர்வகிக்கப் படும் நிதிகளுக்குள் கட்டுப்படுத்தவும் அது முன்மொழிந்தது.

- டிஜிட்டல் வெளிப்படுத்தல் பதிவேடு மற்றும் பாதுகாப்பான தகவல் பறிமாற்றப் பாதையுடன் கூடிய நெறிமுறைகள் மற்றும் இணக்க அலுவலகத்தை உருவாக்க இது பரிந்துரைத்தது.
- ஒழுங்குமுறை விவகாரங்களில் SEBI ஆணையத்தின் முன் ஆஜராவதற்கு முன்னதாக அதன் முன்னாள் அதிகாரிகளுக்கு இரண்டு வருட அவகாச காலத்தை இது பரிந்துரை செய்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஹைட்ரஜன் உற்பத்தி புத்தாக்க சூழல் மையம்




- மதராசின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக (IIT) வளாகத்தில் ஹைட்ரஜன் புத்தாக்கச் சூழல் மையத்தை நிறுவ ஹூண்டாய் மோட்டார் இந்தியா மற்றும் IIT மதராஸ் ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உள்கட்டமைப்பு, உள்ளூர்மயமாக்கல், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பச் சரிபார்ப்பு மூலம் பசுமை-ஹைட்ரஜன் சூழல் அமைப்பை உருவாக்குவதே இந்த மையத்தின் நோக்கமாகும்.
- மொத்தத் திட்டச் செலவான 180 கோடி ரூபாயின் ஒரு பகுதியாக, இந்தத் திட்டத்தின் மூலதனத் தேவைகளுக்கு ஹூண்டாய் நிறுவனம் 100 கோடி ரூபாயை முதலீடு செய்ய உள்ளது.
- பசுமை-ஹைட்ரஜனை ஏற்றுக் கொள்வதை விரைவுபடுத்துவதற்காக தொழில்துறை, கல்வித்துறை மற்றும் அரசாங்கத்தை உள்ளடக்கிய ஒரு தேசிய தளமாக இந்த மையம் செயல்படும்.

## கூகுள் செயற்கை நுண்ணறிவு தரவு மையம்


- கூகுள் கிறிஸ்துமஸ் தீவில் ஒரு செயற்கை நுண்ணறிவு தரவு மையத்தினை அமைக்கத் திட்டமிட்டு வருகிறது.
- இது இந்தோனேசியாவிலிருந்து சுமார் 350 கிலோமீட்டர் தெற்கே அமைந்துள்ள ஒரு ஆஸ்திரேலியப் பிரதேசமாகும்.
- கிறிஸ்துமஸ் தீவை டார்வினுடன் இணைக்கும் ஒரு கடல்சார் கம்பி வட இணைப்பினை உருவாக்க ஆஸ்திரேலியாவின் சுற்றுச்சூழல் ஒப்புதலுக்கு கூகுள் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என்பதோடு இது சப்காம் எனும் அமெரிக்க நிறுவனத்தினால் நிறுவப்பட உள்ளது.

- ❖ ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புத் துறையானது கூகுளுடன் மூன்று ஆண்டு சேவை ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒருங்கிணைந்தப் பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தக மன்றம்





- ❖ ஒருங்கிணைந்தப் பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தக மன்றம் (IFCCT) ஆனது COP30 மாநாட்டின் தலைமைத்துவத்தால் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது.
- ❖ பருவநிலை இலட்சியமும் வர்த்தகக் கொள்கையும் எவ்வாறு குறுக்கிடுகின்றன என்பதைப் பற்றி விவாதிக்க பேச்சு வார்த்தை சாராத, அரசியல் ரீதியாக ஆதரிக்கப் பட்ட இடத்தை இந்த மன்றம் வழங்குகிறது.
- ❖ முறையான ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின் பிணைப்பு சார் கட்டுப்பாடுகள் இல்லாமல் தொழில்நுட்ப மற்றும் கொள்கைத் தீர்வுகளை ஆராய IFCCT வடிவமைக்கப் பட்டுள்ளது.
- ❖ இது பருவநிலை சார் மதிப்புகளின் அளவுருக்கள், கார்பன் மதிப்புக் கணக்கிடல்

மற்றும் பகிரப்பட்ட வர்த்தகப் பருவநிலை கட்டமைப்புகளை வரையறுப்பதில் ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த மன்றம் ஆனது COP30 மாநாட்டின் செயல்பாட்டு நிரலின் ஒரு பகுதியாகும், என்பதோடு மேலும் வர்த்தகம் மற்றும் பருவநிலை நடவடிக்கைகளை சீரமைப்பதன் மூலம் முதல் உலகளாவிய மதிப்பீட்டிற்கு நேரடியாகப் பதிலளிக்கிறது.

## பருவநிலை நிதி தளம்




- பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் "பருவநிலை மற்றும் இயற்கை நிதி"க்கான தேசிய தளத்தை இந்தியா அறிவித்தது.
- இந்தத் தளம் ஆனது 2015 ஆம் ஆண்டு முதல் உலகளவில் 19 பில்லியன் டாலரை உறுதி செய்துள்ள பசுமை பருவநிலை நிதியம் (GCF) மூலம் செயல்படும்.
- இந்தியா மற்ற 12 நாடுகளுடனும் ஆப்பிரிக்க பிராந்திய கூட்டணியுடனும் இணைந்து, தணிப்பு மற்றும் ஏற்பு நடவடிக்கைகளுக்காகப் பருவநிலை நிதியை அணுகுவதை ஒழுங்குபடுத்துகிறது.
- இங்கு இந்தியா, தூய்மையான எரிசக்தி, நீர், போக்குவரத்து மற்றும் பருவநிலை சார் புத்தொழில் நிறுவனங்களில் 11 திட்டங்களில் 782 மில்லியன் டாலர் மதிப்புள்ள GCF உறுதிமொழிகளைப் பெற்றுள்ளது.
- இந்தத் தளம் அதன் ஆரம்பக் கட்டத்தில் ஆப்பிரிக்கா பருவநிலை அறக்கட்டளையால் வழங்கப்படும் 4 மில்லியன் டாலர் ஆரம்ப நிதியுடன் ஆதரிக்கப்படும்.

## Food Waste Breakthrough முன்னெடுப்பு

- Food Waste Breakthrough - உணவுக் கழிவுகளுக்கான திருப்புமுனை மிக்க முன்னெடுப்பானது பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் அதிகாரப் பூர்வமாக தொடங்கப்பட்டது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய உணவுக் கழிவுகளை பாதியாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த முன்னெடுப்பு மீத்தேன் உமிழ்வில் 7 சதவீதம் வரை குறைப்பை இலக்காகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) 3 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள நான்கு ஆண்டு திட்டத்துடன் இதை ஆதரிக்கிறது.
- இந்த முன்னெடுப்பு ஆனது COP28 மாநாட்டின் எமிரேட்ஸ் பிரகடனம் மற்றும் COP29 மாநாட்டின் மீத்தேன்-கழிவு உறுதிமொழிகள் உள்ளிட்ட முந்தைய COP அறிவிப்புகளுடன் ஒத்துப் போகிறது.




## இருபால் இனம் கொண்ட சிலந்தி - டமார்கஸ் இனசுமா




- தாய்லாந்தில் உள்ள அறிவியலாளர்கள் டமார்கஸ் இனசுமா என்ற புதிய சிலந்தி இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- உடலின் ஒரு பாதி ஆணாகவும் மற்ற பாதி பெண்ணாகவும் இருக்கும் இந்த சிலந்தி, கைனாண்ட்ரோமார்பிஸம் (இருபால் இனம் கொண்ட) என்ற நிலையைக் கொண்டு உள்ளது.
- இத்தகைய இனம் பெம்மெரிடே குடும்பத்தில் பதிவு செய்யப்படுவது இது முதல் முறை

ஆகும் என்பதோடு மேலும் மைகலோமார்ஃப் சிலந்திகளில் அறியப்பட்ட மூன்றாவது எடுத்துக்காட்டு இது ஆகும்.

- முறையான நச்சுத் தன்மை குறித்த ஆய்வுகள் எதுவும் இல்லை, ஆனால் அதனுடன் தொடர்புடைய சிலந்தி குடும்பங்கள் நச்சு சுரப்பிகளைக் கொண்டிருப்பதாக அறியப் படுகிறது.

## மேற்குத் தொடர்ச்சி மலைகளில் புதிய கற்பாசி இனங்கள்

- கொச்சியில் உள்ள ஓர் ஆராய்ச்சி குழு மேற்குத் தொடர்ச்சி மலைகளில் நான்கு புதிய வகை கற்பாசி/லைக்கென் இனங்களைக் கண்டறிந்துள்ளது.
- இங்கு அடையாளம் காணப்பட்ட இனங்கள்
    - பர்மோட்ரேமா சஹ்யாட்ரிகம் (வயநாடு),
    - சோலெனோப்சோரா ரைசோமார்பா (எராவிகுளம் மற்றும் மதிகெட்டான் சோலை தேசிய பூங்காக்கள்),
    - புவெல்லோவா கட்டன்சிஸ் (மதிகெட்டான் சோலை தேசிய பூங்கா) மற்றும்
    - பிக்சின் ஜானகியே (மதிகெட்டான் சோலை தேசிய பூங்கா).
- மேற்குத் தொடர்ச்சி மலையின் கேரளப் பகுதியில் புதிதாகப் பதிவான 50க்கும் மேற்பட்ட லைக்கென் இனங்களையும் இந்தக் குழு பதிவு செய்தது.
- லைக்கென்கள் காற்றில் இருந்து நேரடியாக மாசுபடுத்திகளை உறிஞ்சுவதால் அவை உயிரிக் கண்காணிப்பு முகவர்களாகச் செயல்படுகின்றன.




# மாநிலச் செய்திகள்

## இணையவெளி மோசடி எதிர் நடவடிக்கை வலையமைப்பு

- மேகக் கணினி அடிப்படையிலான 1930 அழைப்பு மையம் மூலம் இணைய வெளி - மோசடி அழைப்புகளுக்கு 100% எதிர் நடவடிக்கை விகிதத்தை அடைந்த இந்தியாவின் முதல் மாநிலமாக கோவா மாறியது.
- இந்த அமைப்பை இயக்குகின்ற 24×7 செயல்படும் குழு, அழைப்பாளர் விவரங்களை தானாகப் பதிவுசெய்து தெளிவான தகவல் தொடர்பு மற்றும் முழு ஆவணங்களை

வைத்திருக்கிறது.

- இந்த வலையமைப்பு ஆனது, சிறந்த சேவை மற்றும் நம்பகத் தன்மையை உறுதி செய்வதற்காக, அழைப்பு பதிவுகளை மதிப்பாய்வு செய்கிறது, நேரடி அழைப்புகளைக் கண்காணிக்கிறது மற்றும் தேவைப்படும் போது கூட்டு அழைப்புகளில் இணைகிறது.
- இணையவெளி மோசடி இழப்புகள் சுமார் 100 கோடி ரூபாயாக இருந்த கோவாவில் கடந்த ஓராண்டில், இந்த அமைப்பு மிக விரைவாகப் புகாரளிக்கவும் நிதியைக் கண்டு அறியவும் உதவுகிறது.

**MAKING AN IMPACT**

**100% response rate**
➤ First state police in India to achieve full response on cyber fraud calls

**5,000+ calls handled**
➤ Including 1,500 missed calls returned by the team

**Faster reporting, quicker action**
➤ Prompt alerts helped save citizens' money from ongoing frauds

**24x7 dedicated team**
➤ Nine cyber police personnel attending calls round the clock

**Better caller accessibility**
➤ Cloud-based system captures caller details for seamless follow-ups

**Improved voice clarity & recordings**
➤ Every call is recorded, reviewed, and monitored for quality

**Real-time supervision**
➤ Allows senior officers to join calls and guide responses instantly

## சோஹ்ரா சுற்றுலா சுற்று திட்டம்




- மத்திய வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டு அமைச்சர் (DoNER) மற்றும் மேகாலயா முதல்வர் மேகாலயாவின் சோஹ்ராவில் சோஹ்ரா சுற்றுலா சுற்றுவட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.

- இந்தத் திட்டம் என்பது பிரதமரின் வடகிழக்குப் பிராந்தியத்திற்கான மேம்பாட்டு முன்னெடுப்பின் (PM-DevINE) கீழ் நிதியளிக்கப்படுகிறது.
- 200 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டம் ஆனது, சோஹ்ராவில் நிலையான சுற்றுலா உள்கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

### ஒடிசா கடற்கரைகளுக்கான நீலக் கொடி அங்கீகாரம்




- சுனாப்பூர் கடற்கரையானது தொடர்ந்து 3வது ஆண்டாக சர்வதேச நீலக் கொடி சான்றிதழைப் பெற்றது.
- பூரியின் கோல்டன் கடற்கரை 7வது முறையாக நீலக் கொடி சான்றிதழைப் பெற்றது.
- இந்தச் சான்றிதழை டென்மார்க்கில் உள்ள சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை (FEE) வழங்குகிறது.
- இந்தியாவில் 13 கடற்கரைகள் 2025-26 ஆம் ஆண்டிற்கான நீலக் கொடி அந்தஸ்தைப் பெற்றன என்ற நிலையில் இதில் ஒடிசாவில் உள்ள இரண்டு கடற்கரைகளும் அடங்கும்.

## முக்கிய தினங்கள்

### அனைத்து வகையான பன்னாட்டு அமைப்பு சார் குற்றங்களைத் தடுப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்குமான சர்வதேச தினம் 2025 – நவம்பர் 15

- இந்த நாள் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று பலெர்மோ உடன்படிக்கை என்றும் அழைக்கப்படும் பன்னாட்டு அமைப்பு சார் குற்றங்களுக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையை (UNTOC) ஏற்றுக் கொண்டதை நினைவு கூரும் நாளாகும்.
- இது நாடு கடந்த பன்னாட்டு அமைப்பு சார் குற்றத்தின் (TOC) அச்சுறுத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை (UNGA) தீர்மானத்தால் அறிவிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Follow the Money. Stop Organized Crime" என்பதாகும்.




## தேசியப் பத்திரிகை தினம் 2025 - நவம்பர் 16





- ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் சுதந்திரமான மற்றும் பொறுப்பான பத்திரிகையை கௌரவிப்பதே இதன் நோக்கமாகும்.
- இந்தியப் பத்திரிகைச் சபையினால் (PCI) நிறுவப்பட்ட இந்த நாள் முதன்முதலில் 1966 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Reporting in the Brave New World – The Impact of Artificial Intelligence on Press Freedom and the Media" என்பதாகும்.

## தேசிய வலிப்பு நோய் தினம் 2025 - நவம்பர் 17

- மீண்டும் மீண்டும் வலிப்புத் தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு நரம்பியல் நிலையான வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இது முதன்முதலில் இந்திய வலிப்பு நோய் அறக்கட்டளையால் 2009 ஆம் ஆண்டில் டாக்டர் நிர்மல் சூர்யாவின் தலைமையில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் சுமார் 1.2 கோடி மக்கள் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற நிலையில் மேலும் உலகளவில் 7 கோடிக்கும் அதிகமான மக்கள் வலிப்பு நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Understanding Seizures, Symptoms, and Treatment Options" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## பண்டைய கால மாமத் இனத்தின் ஆர்.என்.ஏ

- அறிவியலாளர்கள், சைபீரியாவின் நிரந்தர உறைபனியில் பாதுகாக்கப்பட்ட 39,000 ஆண்டுகள் பழமையான கம்பளி யானையின் (மாமத்) உடலிலிருந்து பழமையான ரிபோநியூக்ளிக் அமிலத்தை (ஆர்.என்.ஏ) மீட்டுள்ளனர்.
- யூகா என்று அழைக்கப்படும் இந்த மாதிரி, ரஷ்யாவின் லாப்டேவ் கடல் கடற்கரைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது.
- மாமத் இறப்பதற்கு சற்று முன்பு தசை அமைப்பு, செல்லுலார் பராமரிப்பு மற்றும் மன

அழுத்த செயல்பாடுகளுடன் தொடர்புடைய மரபணு செயல்பாடு இருந்ததை ஆர்.என்.ஏ காட்டியது.

- சிதைந்த மூலக்கூறுகளுக்கு ஏற்றவாறான மரபணு வரிசையாக்க முறைகள், கம்பளி யானை மற்றும் யானை மரபணுக்களுடன் பொருந்தக் கூடிய பிரதிகளை அடையாளம் காண உதவியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★